30.11.52 தஞ்சை இருந்த ஜில்லாக்களில் பெரும் புயல் - மழை. பெருத்த சேதம். *. 15.12.52ல் ஆந்திரா தனி மாகாணம் கோரி 58 நாள் வரை உண்ணாவிரதமிருந்த பொட்டி ஸ்ரீ ராமுலு மரணமடைந்தார். வயது 51. . *. 19.12.52ல் சென்னை நகரமில்லாத ஆந்திர ராஜ்யம் அமைக்க அரசு முடிவு டில்லி வெளியிட்டது. அதன் எல்லை தீர்மான தலைவராக ராஜஸ்தான் நீதிபதி வாஞ்சு என்பவர் அமைக்கப்பட்டார். ஜனவரி 30க்குள் முடிவு அளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. * 23.12.52ல் வேலைக்கு நேயன் கிடைத்தது *. 26.12.52ல் கவைக்கர் இருவரின் இறை விஜயம் * 26.12.52. த.நா.கா.க தலைவராக காமராஜ் போட்டியின்றி தேர்வு. 1939 முதல் தொடர்ந்து இடையறாது கடந்த பெப்ரவரி முதல் தேதி வரை தலைவராக இருந்துவந்தார். கடந்த எட்டு மாதமாய் சுப்பராயன் இருந்தார் * 12.1.53, இன்று முதல் நான் பத்து வரை பரோலில் சென்று வர "கோபு"க்கு உத்தரவு வந்து சென்றார் * 16.2.53ல் ஊழல் போட்டுக் கொண்டு வெளி ஆஸ்பத்திரி போய் வந்தேன் * 4.3.53ல் "இ" வகையறா வந்தனர் * 5.3.53 தேதி வியாழன் இரவு 9.50 மணிக்கு சோவியத் பிரதமர் தோழர் ஸ்டாலின் இரத்த அழுத்தத்தினால் ஏற்பட்ட நோய் தாக்கி இரத்த நாளம் உடைந்து இரத்தப் பெருக்கம் இருதய கோளாறும் ஏற்பட்டு மரணமடைந்தார். அவர் பிறந்தது 21.12.1879. ** 20.2.53 லிருந்து 14.3.53 வரையுமல் ஜுரமல் ஆஸ்பத்திரியிலிருந்தது ** 22.3.53ல் இரண்டு பாரா நமக்கப் பெறப்பட்டது. * 26.3.53ல் ஐ.ஜி. வந்து சென்றது. * 1.4.53ல் மேலும் சத்திர சிகிச்சை செய்யக் கீழ்ந்த சிறையிலிருந்து வெளி ஆஸ்பத்திரிக்கு சென்றேன். 2.4.53ல் ஆப்பரேஷன் செய்யப்பட்டது. 8.4.53ல் என்னைப் பார்க்க ராமனும் அம்மாவும் வைத்திய சாலைக்கு வந்து சென்றார்கள். 11.4.53ல் தோழர் M.K. எங்களைப் பார்க்க வைத்திய சாலைக்கு வந்து போனார். 14.4.53ல் தோழர் M.K. யை மீண்டும் சந்தித்தேன். 18.4.53 இல் வெளி ஆஸ்பத்திரியிலிருந்து சிறை ஆஸ்பத்திரிக்கு வந்தேன். 7.5.53 இல் சிறை ஆஸ்பத்திரியிலிருந்து பாரக்குக்கு வந்தேன். *** * 23.5.53 இல் மாயூரத்திலிருந்து ரூ 4.0.0 (5.0.0 அனுப்பச் சொன்னதில் ராமன் ரூ ஒன்று எடுத்துக் கொண்டான்) மணியார்டர் மூலமாக வந்தது *** 26.5.53 இல் வெளி ஆஸ்பத்திரி சென்று வந்தேன் ** 2.6.53 இல் வெளி ஆஸ்பத்திரி சென்று (D) செய்து வந்தேன் ** 16.6.53 வெளி வைத்தியசாலை சென்று (D) செய்து வந்தேன் * 18.6.53ல் வெளி ஆஸ்பத்திரி சென்று (D) செய்து வந்தேன் *** 1.7.53 வெளி வைத்தியசாலை சென்று (D) செய்து வந்தேன். ரோஷம் மிகுந்து அதிகமாக செய்ததால் 6 தினங்கள் வரையில் மல [illegible] போக்கு *** 6.7.53 இன்று நாகையிலிருந்து V.S.R. ரூபாய் ஐந்து அனுப்பியிருந்தார் o*o 6.7.53 இன்று துணிகள் (கோட் 1, பெனியன் 1, பைஜாமா 1, கர்சிப் 1, நைட் கோட் 1, பெட்கவர் 1, பாத்டவல் 1, தொப்பி 1, பாய் 1, ஆக உருப்படிகள் ஒன்பது) கிடைத்தன. ***. 8.7.53 இல் வொரண்டைன் காவல் செய்யப்பட்டது. இன்று நான் வெளி ஆஸ்பத்திரி போய் (D) செய்து வந்தேன். *** 26.7.53 இன்று விடுவித்துக் கொண்ட செய்தியை கேட்டுத் தெரிந்துக் கொண்டேன். *** 30.7.53 இல் வெளி வைத்திய சாலைக்குப் போய் (D) செய்து வந்தேன். *** 22.8.53 இல் திரு.பட்டினம் G. ராமலிங்கம் பிள்ளையிடமிருந்து 18.8.53 இல் மணியார்டர் மூலமாக அனுப்பியது கிடைத்தது *** 22.8.53 இல் சிறை சூப்பரிண்டெண்ட் புதியவர் வந்தது *** 27.8.53ல் நல்லக்கண்ணுவை ஆ இண்டர்வியூவால் பேசியது *** 28.8.53ல் நாகையிலிருந்து V.S.R. அனுப்பிய மணியார்டர் ரூ 5/- (26.8.53ல் அனுப்பியது) கிடைத்தது *** 17.9.53 இல் இரவு 7.45க்கு தமிழ் தனிப் பெரும் பெரியார் திரு.வி. கல்யாணசுந்தரம் முதலியார் மரணம் அடைந்தார் *** [illegible] திரு.பட்டினம் நடராஜன் ரூ 5/- அனுப்பியதை 13.10.53ல் பெற்றுக் கொண்டேன் *** வைத்திய சிகிச்சை பெற பழனிவேல் 15.10.53ல் மதராஸ் சென்றார். 3.11.53ல் ஹரண்யன், நல்லகண்ணு, துரைசாமி இம்மூவரும் விடுதலையானார்கள் ***